வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 14.06.2025 சனிக்கிழமை இதழ் : 165 பக்கங்கள் : 12

### ஈ.பி.டி.பி., ஐ.ம.ச., ஐ.தே.க. ஆதரவுடன்

# யாழ். மாநகர சபையில் தமிழ் அரசு கட்சி ஆட்சி

- முதல்வரானார் மதிவதனி
- பிரதி முதல்வராக தயாளன்
- தேசிய மக்கள் சக்தி நடுநிலை

- த.பிரதீபன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 14

**யாழ்ப்பாணம் மாநகர சபையில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஆட்சியை கைப்பற்றியுள்ளது. முதல்வராக அந்தக் கட்சியின் திருமதி மதி வதனி விவேகானந்தராஜாவும் பிரதி முதல்வராக இமானுவல் தயாளனும் தெரிவாகினர்.**

யாழ். மாநகர சபையின் முதல்வரை தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

முதல்வர் பதவிக்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் திருமதி மதிவதனி விவேகானந்த ராஜா, தமிழ்த் தேசிய பேரவை



சார்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கனகையா சிறீ கிருஷ்ணகுமார் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். தேசிய மக்கள் சக்தியின் சார்பில் எவரும் பரிந்துரைக்கப்படவில்லை.

இதைத் தொடர்ந்து, முதல்வர் தெரிவுக்கு பகிரங்க 11

## நல்லூர் பிரதேச சபையில் ‘வீடு’, ‘மான்’ கூட்டாக ஆட்சி

### ஈ.பி.டி.பி. கட்சி வெளிநடப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

நல்லூர் பிரதேச சபையில் தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கை தமிழ் அரசுக் கட்சி இணைந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளன.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளரை தெரிவதற்கான கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில், தமிழ் மக்கள் கூட்டணியின் பத்மநாதன் மயூரன் தவிசாளராகவும் இலங்கைத் 11

### திருவுளச்சீட்டின் மூலமாக

## சாவகச்சேரி நகர சபை த.தே.பேரவை வசமானது!

தென்மராட்சி, ஜூன் 14

திருவுளச்சீட்டின் மூலமாக சாவகச்சேரி நகர சபையின் ஆட்சியை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி இணைந்த தமிழ்த் தேசிய பேரவை கைப்பற்றியுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளராக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வ. சிறீபிரகாஷ் திருவுளச்சீட்டு மூலம் தெரிவானார்.

இதேபோன்று, உப தவிசாளராக ஜன நாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஞா. கிஷோர் திருவுளச்சீட்டு மூலம் தெரிவானார்.

சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் தெரிவு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வடக்கு 11

## ‘ஆனையிறவு உப்பு’ என்று பெயர் மாற்றப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கு ‘ஆனையிறவு உப்பு‘ என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கு ‘ரஜ உப்பு’ என்று சிங்களத்தில் பெயர் சூட்டப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. 11




### பாலச்சந்திரன், இசைப்பிரியா உட்பட

## சரணடைந்தோர் கொலை; விசாரிக்குமாறு கோரி மனு!


கொழும்பு, ஜூன் 14

இறுதிப் போரின்போது சரணடைந்த இசைப்பிரியா, பாலச்சந்திரன் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை கோரி பொலிஸ் மா அதிபருக்கு மனு ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

தனுக ரணஞ்சக கஹந்தகமகே என்ற சட்டத்தரணியே இந்தக் கோரிக்கை மனுவை அளித்துள்ளார்.

அந்தக் கோரிக்கை மனுவில், “சரணடைந்தவர்களை கொன்றமை தொடர்பான புகார் (இசைப்பிரியா, பாலச்சந்திரன் பிரபாகரன் உட்பட) சர்வதேச மனிதாபிமான சட்டமீறல். தனுக ரணஞ்சக 11

## தெல்லிப்பழை மருத்துவமனை; நேற்று கவனவீர்ப்பு போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 14

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் சீரற்ற நிர்வாகத்தை கண்டித்தும், புற்றுநோய் சிகிச்சையை குழப்பும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்றைய தினம் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற இந்தப் போராட்டத்தில் 11

## இன ரீதியான மனக்குறைகள் புத்துருவாக்கம் பெறும் நிலை!

### ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலை எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 14

சிறுபான்மையினரின் உரிமைகள் நீதியானதும் சமத்துவமானதுமான முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அன்றேல், மீண்டும் இனரீதியான மனக்குறைகள் புத்துருவாக்கம் பெறக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகிறது என்று ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலைக்கழகம், சிறு பான்மையின உரிமைகள் நிலையம் 11

## வழங்கிய வாக்குறுதிகளை மறந்து செயல்படுகிறது அரசு!

### கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 14

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்கு நீதி வழங்க விசேட வழக்கு பதிவாளர் பணிமனை ஒன்றை நிறுவுவதாக வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் தற்போது மறந்துவிட்டது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் 11

## ஈரான் அணு தளங்கள்மீது இஸ்ரேல் வான் தாக்குதல்!

### உலக சந்தையில் எண்ணெய் விலை உயர்வு

தெஹ்ரான், ஜூன் 14

ஈரானின் அணு சக்தி தளங்கள் உட்பட முக்கிய இலக்குகள் மீது இஸ்ரேல் பரந்துபட்ட வான் தாக் குதல்களை நடத்தியுள்ளது. இதில், ஈரானின் புரட்சி காவல் 11

## நாகபட்டினம் - காங்சேன் கப்பல் சேவை; மேம்படுத்துவதற்கு இந்தியா மீளவும் உதவி!

கொழும்பு, ஜூன் 14


நாகபட்டினம், காங்கேசன்துறை இடையே மேற்கொள்ளப்பட்டு வரும் பயணிகள் கப்பல் சேவையை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் ஒரு வருடத்துக்கு நிதி உதவியை மேலும் நீடித்துள்ளது.

இது, பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப் படுத்துகிறது 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# தமிழ் அரசிடமிருந்து விக்னேஸ்வரனை பாதுகாக்க தற்போது யாரும் இல்லை!



## சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கு மாகாண முதலமைச்சராக பதவி வகித்த சி. வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக இலங்கை தமிழ் அரசு கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைக்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி தாமே அவரை பாதுகாத்ததாக சுட்டிக்காட்டியுள்ள, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணை தலைவர் த. சித்தார்த்தன், "எதிர் வருங்காலத்தில் விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழ் அரசுக் கட்சி முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகளிலிருந்து அவரை பாதுகாப்பதற்கு யாரும் இல்லை", என்றும் கூறியுள்ளார்.

தமிழ் அரசு கட்சியும் விக்னேஸ்வரனும் கடந்த புதன்கிழமை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர். இதைத் தொடர்ந்து, கருத்து வெளியிட்ட விக்னேஸ்வரன், உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியுடன் பேச்சு நடத்தப்பட்டது. அவர்கள் சங்கு சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர். இதற்கு உடன்படமறுத்தே தனித்து செயல்பட்டோம். உள்ளூராட்சி மன்றங்களில் ஜனநாய தமிழ்த் தேசிய கூட்டணியுடன் பயணிப்பதை விட தமிழ் அரசு கட்சியுடன் இணைவது அதிக சந்தோசத்தை அளிக்கிறது என்று கூறினார். இது தொடர்பில் கருத்துரைக்கையிலேயே சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஐ)

# 6 ஆடுகளை திருடிய சந்தேகநபர்கள் கைது!

தென்மராட்சி, ஜூன் 14

தச்சன்தோப்பு பகுதியில் சுமார் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான 6 ஆடுகளை களவாடிய இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் இடம்பெற்ற இந்தத் திருட்டு தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகளை நடத்திய சாவகச்சேரி பொலிஸார், அந்த சூழலில் சுற்றித் திரிந்த வாகனங்களின் இலக்கங்களை அடிப்படையாக வைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்த நிலையில்ட, புத்தளம் மாவட்டத்தில் பதிவான வாகனத்தை துன்னாலையை சேர்ந்த ஒருவர் செலுத்தி வந்தமையை அறிந்த பொலிஸார் அது தொடர்பில் விசாரணைகளை விரைவுபடுத்தினர்.

பொலிஸார் சந்தேகநபரின் இடத்துக்கு சென்று விசாரித்த நிலையில் திருடப்பட்ட 6 ஆடுகளில் 5 ஆடுகள் மீட்கப்பட்டன. இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை சான்றுப் பொருட்களுடன் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்காக பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ)

# நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 14

கலாபூஷணம் பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை எழுதிய நாட்டிய நாடகத் தொகுப்பு - இரண்டாம் பாகம் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறீ பரராசசேகரப் பிள்ளையார் திருநெறிய தமிழ்மறைக் கழகம் நடத்தும் இந்த நிகழ்வு மேனாள் பேராசிரியர் க. தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா கலந்து கொள்ளவுள்ளார். வாழ்த்துரையை பேராசிரியர் வ. மகேஸ்வரன் நிகழ்த்துவார். சிறப்பு விருந்தினராக திருமதி குகுகுமாரி விஜயரகுநாதன் பங்கேற்பார். (ஐ)



# இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

உலக இரத்த தான தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம், யாழ். போதனா மருத்துவமனை இணைந்து இரத்த தான முகாம் ஒன்றை நடத்தின.

யாழ்ப்பாணத் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இந்த முகாம் ஆரம்பமானது.

இந்த இரத்த தான முகாமில் பங்கேற்ற குருதி கொடையாளர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. சமூகத்தில் இரத்த தானத்தின் முக்கியத்துவத்தையும் சூழலியலின் பாதுகாப்பையும் ஒருசேர வலியுறுத்தும் நோக்கத்துடன் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். இந்திய துணைத் தூதர் சாய் முரளி, யாழ். போதான மருத்துவமனை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். இந்திய துணை தூதரக அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ-05)

# வடமராட்சி கிழக்கில் மீனவர்கள் மோதல்!

வடமராட்சி, ஜூன் 14

வடமராட்சி கிழக்கு - செம்பியன்பற்றில் மீனவர்களிடையே நேற்று மதியம் மோதல் இடம்பெற்றுள்ளது. இதில், மீனவர் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

டிராக்டரை பயன்படுத்தி கரைவலை தொழிலில் ஈடுபடுவது குறித்தே இந்த மோதல் வெடித்துள்ளது. செம்பியன்பற்றில் டிராக்டரை பயன்படுத்தி கரைவலை தொழில் செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனை மீறி சிலர் தொழிலில் ஈடுபட்டனர். அப்போது, தங்களை அந்தப் பகுதியின் கடற்றொழில் சங்க உறுப்பினர்கள் என்று அடையாளம் காட்டியவர்களிடையேயுமே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று நண்பகல்வேளை இடம்பெற்ற இந்த மோதலில் மீனவர் ஒருவர் காயமடைந்து மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

# வவுனியா தெற்கு வலய விளையாட்டு போட்டி!



வவுனியா, ஜூன் 14

வவுனியா தெற்கு வலய மட்ட விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை ஆரம்பமான இந்த விளையாட்டுப் போட்டியில் இன்று சனிக்கிழமை இறுதிநாளாகும்.

வவுனியா தெற்கு வலயத்துக்கு உட்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள பாடசாலைகள் உள்ளடங்கலாக 102 பாடசாலை கள் பங்கேற்றுள்ளன.

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வரும் இந்த விளையாட்டு போட்டியில், வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து தேசிய ரீதியாக தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்த விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் த. முகுந்தன் தலைமையில் நடைபெற்று வரும் இந்நிகழ்வில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், உதவி மாவட்ட செயலாளர் கு. சுபர்ஜா, பிரதி கல்வி பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், உதவிக் கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# கோவிட் - 19 தொற்று பரவல் கட்டுப்பாட்டிலேயே உள்ளது!

## சுகாதார அதிகாரிகள் உறுதி

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் கடந்த சில வாரங்களில் சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற சுவாச நோய்கள் அதிகரித்து வந்தாலும் கோவிட்-19 நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இது தொடர்பாக தொற்று நோயியலின் விஞ்ஞான பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் அதுல லியன பத்திரண கருத்து தெரிவிக்கையில்,

"கோவிட்-19 இப்போது பல்வேறு சுவாச நோய்களில் ஒன்றாகவே கண்காணிக்கப்படுகிறது. தற்போதைய நிலவரம் தொடர்பான தனித் தரவுகள் சேகரிக்கப்படுவதில்லை. எனினும், நிலைமையின் மீது எங்களது தீவிர கண்காணிப்பு தொடர்ந்தும் காணப்படுகிறது" என்றார்.

மேலும், இந்நேரத்தில் இன்புளுவென்சா மற்றும் பிற சுவாச நோய்களின் பரவல் அதிகரித்திருப்பதை கருத்தில் கொண்டு, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுவாச நோய்கள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் மீள்பார்வை நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போதைய சுவாச நோய்கள் அதிகரித்திருக்கும் சூழ்நிலையில், மக்கள் சுவாச நிலையை சீராக வைத்திருக்க ஒழுங்குமுறைகளை பின்பற்ற வேண்டும். அதாவது, இருமல், தும்மலின்போது தொற்றுக்களைத் தடுக்கும் முறைகளை கடைபிடிக்கப்பட வேண்டும்.

காய்ச்சல், இருமல் அல்லது மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் தோன்றும் தருணங்களில், உடனடியாக மருத்துவ உதவியை பெற வேண்டும். இந்த நோய்கள் அதிகமாக பாதிக்கக்கூடியவர்களான வயதானோர், குழந்தைகள் மற்றும் நீண்டநாள் நோயாளிகள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம்.

அத்துடன், மருத்துவ ஆலோசனையை தவிர்க்காமல் பெறுவது, நோய் பரவலையும் அதனால் ஏற்படும் சிக்கல்களையும் தடுக்கும் முக்கியமான வழி - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.06.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புனிதங்களுக்காக மோதிக் கொண்டவர்களே!

யாழ். மாநகர சபையின் ஆட்சியை இலங்கை தமிழ் அரசு கட்சி கைப் பற்றியிருக்கிறது. ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவு இருக்கும் நிலையில் அதற்கான சாத்தியம் தொடர்பில் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது. இதே வேளை, இலங்கையின் தேசிய கட்சிகளின் ஆதரவையும் தமிழ் அரசு கட்சி பெற்றிருக்கிறது.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை தமிழ் அரசு கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் வெளிப்படையாக சந்தித்து ஆதரவு கோரியிருந்தார். அப்போது இதனை தமிழ் அரசு கட்சிக்குள் விமர்சித்தவர்கள் இப்போது அமைதியாக இருக்கின்றனர். இது தவறானதொரு முடிவு என்று அவர்கள் கருதினால், அவர்கள் கட்சிக்குள் போராடலாம் அல்லது கட்சியை விட்டு வெளியேறலாம். ஆனால், அதனை அவர்கள் செய்யப் போவதில்லை. ஏனெனில், அவர்களின் கொள்கை என்பது வெறும் வாய்ச்சொல் கொள்கைதான்.

இதுவரை காலமும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் கடந்த காலம் தொடர்பில் பேசிய விடயங்களை இனிப் பேச முடியாது. டக்ளஸ் தேவானந்தாவோடு உடன்பாட்டுக்கு சென்றிருந்தால் அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து ஆட்சியை கைப்பற்றியிருக்கலாம். ஆனால், அதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இணங்கவில்லை.

பொதுவாக தேர்தல் காலங்களில் ஒரு கட்சியின் தொண்டர்கள் ஆதரவாளர்கள் ஏனைய கட்சிகளின் கடந்த காலத்தை முன்வைத்து அவர்களை விமர்சிப்பது உண்டு - அவமானகரமாக பேசுவது உண்டு. இதில், ஒப்பீட்டு அடிப்படையில் சைக்கிள் ஆதரவாளர்கள் முன்னணி வகித்தாலும்கூட, இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஆதரவாளர்களும் சளைத்தவர்கள் அல்லர். அவர்களும் மற்றவர்களை நோக்கி தாராளமாகவே கற்களை வீசியிருக்கின்றனர்.

ஆனால், கட்சிகளின் தலைவர்களும் முக்கிய உறுப்பினர்களும் எப்போதும் தங்களுக்குள் உறவாடுபவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் மேடையில் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு பேசுவதையெல்லாம் உண்மையென்று எண்ணிக் கொண்டு தங்களை அர்ப்பணிப்புள்ள தொண்டர்களாகக் கருதிக் கொள்பவர்கள்தான் உண்மையிலேயே பரிதாபத்துக்கு உரியவர்கள்.

2009இற்கு முன்னரான அரசியல் சூழலில் புலிகளை முன்வைத்து ஏனையவர்களை துரோகிகள், ஒட்டுக் குழுக்கள் அரச முகவர்கள் என்று கூச்சலிடும் அரசியல் போக்கு மேலாதிக்கம் பெற்றிருந்தது. இந்தக் காலத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அதன் அரச ஆதரவு நிலைப்பாட்டுக்காக துரோகக் கட்சியாகவே சித்தரிக்கப்பட்டது. பெரும்பாலான கருத்துருவாக்கிகள், ஊடகவியலாளர்களும் அவ்வாறுதான் நோக்கினர். அவ்வாறு நோக்குவதை பெருமையாகவும் எண்ணிக் கொண்டனர். இதேபோன்று, கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு முன்னர் விடுதலைப் புலிகளுடன் அரசியல் ரீதியில் முரண்பட்ட அனைவருமே துரோக தராசு கொண்டுதான் நிறுத்துப் பார்க்கப்பட்டனர். கூட்டமைப்பின் உருவாக்கம் பலரை புனிதர்களாக்கியது. அதன் பின்னர் கூட்டமைப்புக்கு வெளியில் நின்றவர்கள் துரோகிகளானார்கள்.

2009இற்கு பின்னர் துரோகி, ஒட்டுக் குழுக்கள் என்று எவர்கள் மீதெல்லாம் கற்கள் வீசப்பட்டனவோ அவர்கள் அனைவரும் இப்போது பல்வேறு இடங்களில் சங்கமித்துவிட்டனர். ஒன்றுக்குள் ஒன்றாகிவிட்டனர். இப்போது இவர் துரோகி, அவர் புனிதர் என்று பிரித்து கோஷமிட முடியாதளவுக்கு நிலைமைகள் மாறிவிட்டன. இந்த வரிசையில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியும் இணைந்துவிட்டது. தமிழ் அரசு கட்சியை சேர்ந்தவர்கள் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை பார்த்து அரச ஒத்தோடிகள் என்று இனிக் கூற முடியாது.

இதேபோன்று விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சியும் இலங்கை தமிழ் அரசு கட்சியுடன் அதிகாரத்துக்கான உடன்பாட்டை செய்திருக்கிறது. அரசியலில் இது ஒன்றும் ஆச்சரியம் தரும் விடயம் அல்ல. ஆனால், தாங்கள் அங்கம் வகித்த கட்சிகளின் தலைவர்களை நம்பி தேவையில்லாமல் மற்றவர்களுடன் விரோதங்களை வளர்த்தவர்கள்தான் இறுதியில் அநாதரவாகியிருக்கின்றனர். அரசியலில் புனிதங்களை கட்டமைத்து அதற்காக மல்லுக்கட்டுபவர்கள் அனைவரும் இவ்வாறுதான் பரிதாபமாகத் தோற்றுப் போவார்கள்.

# தே. ம. சக்தி முன்னிலை வகிக்கும் இரு சபைகள் பெரமுனவின் வசம்

கொழும்பு, ஜூன் 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி முன்னிலை பெற்றுள்ள குளியாப்பிட்டி, உடுபத்தாவ பிரதேச சபைகளை சிறீ லங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிற எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் பொதுஜன பெரமுன இரண்டு சபைகளையும் அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலின் போது, பொதுஜன பெரமுனவின் விஜயசிறி ஏகநாயக்க பெரும்பான்மை வாக்குகளுடன் குளியாப்பிட்டி பிரதேச சபையின் தலைவராக தெரிவானார்.

உள்ளூராட்சி தேர்தலில் இந்த சபையில், தேசிய மக்கள் சக்தி 21 இடங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 9 இடங்களையும், பொதுஜன பெரமுன 6 இடங்களையும், ஐ. தே. க. 4 இடங்களையும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2 இடங்களையும், சர்வஜன பலய ஓர் இடத்தையும் வென்றிருந்தன.

இதேபோன்று, பொதுஜன பெரமுனவின் நிஹால் ஜெயசிங்க பெரும்பான்மை வாக்குகளுடன் உடுபத்தாவ பிரதேச சபையின் தலைவராக தெரிவானார்.

தேர்தல் முடிவுகளின்படி இந்த சபையில், தேசிய மக்கள் சக்தி 9 இடங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 6 இடங்களையும், சிறீ லங்கா பொதுஜன பெரமுன 3 இடங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் இடத்தையும் வென்றிருந்தன. (ஐ)

## போதைப்பொருள் கடத்தல்காரி கைது!

கொழும்பு, ஜூன் 14

போதைப்பொருள் கடத்தல்காரி என்று சந்தேகிக்கப்படும் 'கெலேகம நோனா' என்று அழைக்கப்படும் நாரன் கொட்டுவே கெதர லொக்கு மெனிக்கே என்ற பெண் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - தம்புத்தேகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நீண்டகாலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார். அவரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில், வங்கி கணக்கு புத்தகம், 23 கைபேசிகள், 2 தேசிய அடையாள அட்டைகள், 2 சாரதி அனுமதிப்பத்திரங்கள், 11 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

மேலும், போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 15 இலட்சத்து 84 ஆயிரத்து 670 ரூபாய் பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு மறியல்

கொழும்பு, ஜூன் 14

அநுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் மொஹான் கருணாரத்னவை எதிர்வரும் 23ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மொஹான் கருணாரத்ன நேற்று அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் மொஹான் கருணாரத்ன, நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ. எச். அத்துல திலகரத்ன என்பவரை ஜனாதிபதியின் பொது மன்னிப்பை பயன்படுத்தி சட்டவிரோதமாக விடுதலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த 08 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காசா இன அழிப்பை நிறுத்த வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டம்!





கொழும்பு, ஜூன் 14

காசாவில் இடம்பெற்றுவரும் இன அழிப்பை கண்டித்து கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை மதியம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"காஸாவில் இடம்பெற்று வரும் இன அழிப்புக்கு எதிராக நிற்போம்" எனும் நோக்கத்தில் மாற்றத்துக்கான இளைஞர்கள் அமைப்பால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**



குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். அதிர்ஷ்டம் பெருகும்.

**இடபம்**



சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். வளைந்து கொடுக்க வேண்டும்.

**மிதுனம்**



உற்சாகமாக எதையும் செய்ய தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**



குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வளைந்து கொடுத்து செல்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உங்களின் புதிய முயற்சிகளை பாராட்டுவார்கள். வெற்றி கிட்டும் நாள்.

**சிம்மம்**



குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**



தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களால் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**துலாம்**



துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் மீது அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார். தைரியம் கூடும்.

**விருச்சிகம்**



இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**தனுசு**



சந்திரன் இருப்பதால் மன இறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் கோபப்படுவீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும்.

**மகரம்**



சில வேலைகளை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் பிரச்னைகள் வரக்கூடும்.

**கும்பம்**



திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். ஆன்மிக பெரியோரின் ஆசிகிட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும்.

**மீனம்**



நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். சவால்களில் வெற்றி பெறும் நாள்.


# ஒலிபெருக்கிகள் குறித்த எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழில் வழிபாட்டுத்தலங்களிலும் ஏனைய நிகழ்வுகளிலும் ஒலிபெருக்கிகள் குறித்த எல்லைக்குள் அனுமதிக்கப்பட்ட நேரத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சுற்றாடல் குழுக்கூட்டம் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய பதில் அரசாங்க அதிபர் கூறுகையில், கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்படும் 2ஆம் காலாண்டுக்குரிய கூட்டமாக இது அமைந்துள்ளது. இந்தக் கூட்டத்தில் ஒலிபெருக்கி மூலமாக அதிக ஒலி எழுப்புதலை வரையறுத்தல், திண்மக் கழிவகற்றல் பிரச்னைகள் மற்றும் தற்போது கரையொதுங்கிவரும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டப்பட்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.



இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஹாலிங்க ஜெயசிங்கவும் கலந்துகொண்டார்.

இதேவேளை, வழிபாட்டுத்தலங்கள் மற்றும் விழாக்களின் போது ஒலிபெருக்கி மூலமான ஒலி வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் வழிபாட்டுத்தலங்களிலும் ஏனைய நிகழ்வுகளிலும் ஒலிபெருக்கிகள் குறித்த எல்லைக்குள் அனுமதிக்கப்பட்ட நேரத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு இதனை மீறும் பட்சத்தில் பொதுமக்களிடமிருந்து வரும் முறைப்பாடுகளுக்கு அமைய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொலிஸ் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. இதேவேளை, வழிபாட்டுத் தலங்களில் நிரந்தரமாக பொருத்தப்பட்டிருக்கும் ஒலி பெருக்கிகள் மூலம் இடையூறு ஏற்படும் பட்டத்தில் அது தொடர்பில் வழிபாட்டுத் தல நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதிக சத்தத்துடன் ஒலி எழுப்பும் போது, பொதுமக்கள் அது தொடர்பில் மாவட்டச் செயலக 0212225000 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடுகளை முன்வைப்பதனூடாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு தெரியப்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக பொதுமக்கள் தங்களுடைய முறைப்பாடுகளை எந்நேரமும் 119 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு முறையிடலாம் என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (எ)

# தரம் பிரிக்கப்படாத கழிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

யாழ்ப்பாணம், ஜூன் 14

திண்மக் கழிவு சேகரிப்பின் போது தரம் பிரிக்கப்படாத கழிவுகள் உள்ளூராட்சி அமைப்புக்களால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை மிக இறுக்கமாக பின்பற்றுமாறும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு பதில் அரசாங்க அதிபரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கமைவாக முதற்கட்டமாக அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டு இந்தத் திட்டம் இறுக்கமாக பின்பற்றப்படும் என்று உள்ளூராட்சி திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சுற்றாடல் குழுக்கூட்டம் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, புங்குடுதீவு தெற்கு கடற்கரையோரப் பகுதி, குறிகட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு கடற்கரையோர பகுதிகளில் தற்போது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருள் பெருமளவில் கரையொதுங்கி வருவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மேலும், இந்தக் கூட்டத்தில் ஆலயங்களால் கோரப்பட்ட மண் தொடர்பாகவும் நகர்ப்புறங்களில் காணப்படும் கழிவகற்றல் பிரச்னைகள், வளி மாசு மற்றும் டெங்கு கட்டுப்பாடு தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (எ)

## வீட்டுத் திட்டத்துக்கான நிதி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வீட்டுத் திட்டத்துக்கான நிதி அமைச்சரவையால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டம், வீடமைப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, 02. 06. 2025 இல் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுக்கான நிதி 9 இலட்சம் ரூபாயாகவும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுக்கான நிதி 15 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பதில் அரசாங்க அதிபர் கூறினார். (எ)

## வவுனியா - மன்னார் வீதியில் விபத்து பெண் உட்பட மூன்று பேர் படுகாயம்

வவுனியா, ஜூன் 14

வவுனியா - மன்னார் வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் உட்பட மூன்று பேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - மன்னார் வீதியில் காமினி மகா வித்தியாலயம் முன்பாக நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம் பெற்றது.

வவுனியா குருமன்காடு பகுதியிலிருந்து மன்னார் வீதிநோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் காமினி மகா வித்தியாலயம் முன்பாக பூங்கா வீதியில் திரும்ப முற்பட்டவேளை குறித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உட்பட மூவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அனுபவங்களிலிருந்து பாடம் கற்பதற்கான சிறந்த வாய்ப்பு!

## நாணய நிதிய துணை முகாமைப் பணிப்பாளர்

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் நடைபெறவிருக்கும் "மீட்சிக்கான இலங்கையின் பாதை: படுகடன் மற்றும் ஆளுகை" மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத், இது இலங்கையின் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களில் கவனம் செலுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக அமையும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு வருகை தரவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத், எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் "மீட்சிக்கான இலங்கையின் பாதை படுகடன் மற்றும் ஆளுகை" மாநாட்டில் கௌரவ அதிதியாகப் பங்கேற்கவுள்ளார்.

நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பன இணைந்து நடாத்தவுள்ள இம்மாநாடானது பேரண்டப்பொருளாதார ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்தல், கடன்மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தல், ஏனைய மறுசீரமைப்புக்கள் தொடர்பில் இலங்கையின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை ஆராய்தல் என்பவற்றைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுபற்றி தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டிருக்கும் கீதா கோபிநாத், இம்மாநாடு இலங்கையின் அனுபவங்களில் மற்றும் எதிர்வரும் சவால்களிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களில் கவனம்செலுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக அமையும் என நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# வயலில் பெண்ணின் சடலம்!

கொழும்பு, ஜூன் 14

கம்பஹாவில் மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உன்னாருவ பிரதேசத்தில் உள்ள வயல் ஒன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

35 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பேக்கரி பொருள்களின் விலை உயர்த்தப்படாது

கொழும்பு, ஜூன் 14

மின் கட்டண உயர்வுக்கு ஏற்ப ரொட்டி உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்தார்.

உற்பத்திச் செலவில் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சேர்க்கப்பட்டாலும், தற்போது பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என்றும், அத்தகைய விலைகளை அதிகரிக்க வேண்டாம் என்று பேக்கரி உரிமையாளர்களிடம் கேட்டுக் கொள்வதாகவும் ஜெயவர்தன தெரிவித்தார்.

பேக்கரி உற்பத்தியாளர்கள் இதுபோன்ற நேரங்களில் பொது மக்களுக்குத் தெரியாமல் இரகசியமாக மற்ற பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிப்பதாக நுகர்வோர் கூறுகின்றனர். (அ)

# துசிதவுக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 14

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் துசித ஹல்லொலுவ, கடந்த மே மாதம் 30 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதியின் செயலர், நீதிமைச்சு செயலாளரை விசாரிக்கவேண்டும்!

## பொதுஜன பெரமுன வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகாரம் முறைகேடான வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளமை தொடர்பில் நீதியமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோரை விசாரணைக்குட்படுத்த வேண்டும். அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தால் முழு அரச நிர்வாக கட்டமைப்பும் பலவீனமடையும் நிலை காணப்படுகிறதென பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-அரச சேவையின் உயர் அதிகாரிகளை கைது செய்து அவர்களை விசாரணைக்குட்படுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதனால் அரச சேவையாளர்கள் அச்சமடைந்துள்ளார்கள்.88 மற்றும் 89 ஆண்டு காலப்பகுதிகளில் துண்டுபிரசுரம் ஊடா அரச சேவையாளர்களை அச்சுறுத்திய சூழல் காணப்பட்டது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை எதிர்க்கும் அரச அதிகாரிகளை அச்சுறுத்தும் நிலை தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் பலவீனமான நிர்வாகத்தால் முழு அரச கட்டமைப்பும் பலவீனமடைந்துள்ளது. ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டின் சந்தேகத்தின் அடிப்படையில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கைது செய்யப்பட்டுள்ளார். அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு பொறுப்பேற்கும் நிலையில் ஜனாதிபதியோ அல்லது அரசாங்கத்தின் உயர் பிரமுகர்களோ இல்லை.

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை தலைமையகத்தின் மீது மாத்திரமே குற்றஞ்சாட்டப்படுகிறது. நீதியமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகாரம் முறைகேடான வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் நீதியமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோரை விசாரணைக்குட்படுத்த வேண்டும். அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தால் முழு அரச நிர்வாக கட்டமைப்பும் பலவீனமடையும் நிலை காணப்படுகிறது-என்றார். (அ)

# 30 ஆயிரம் தொன் உப்பை இறக்குமதி செய்ய முடிவு

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் நிலவும் உப்பு தட்டுப்பாடு பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கடந்த மே மாதம் 22ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 7ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 18,163 மெற்றிக் தொன் உப்பு நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் மொத்த மதிப்பு 1,291 மில்லியன் ரூபா ஆகும்.

உப்பு இறக்குமதிக்காக 571 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய உப்பு பற்றாக்குறைக்கு தீர்வாக 30,000 மெற்றிக்தொன் உப்பை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெகுமதி பெற்று ஆளும்கட்சி பக்கம் சாய்ந்த உறுப்பினர்கள்!

## மனோ எம்.பி நடவடிக்கை



கொழும்பு, ஜூன் 14

தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஹல்துமுல்ல பிரதேச சபையின் இரண்டு உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க உள்ளதாக கட்சித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

குறித்த இருவரும் தேசிய மக்கள் சக்தியால் தலைவராக பரிந்துரைக்கப்பட்ட நபருக்கு ஆதரவாக பணத்தை பெற்று வாக்களித்ததற்காக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியில் இணைய அவர்கள் இருவரும் பண வெகுமதிகளை பெற்றதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாற்றத்தை கொண்டு வருவதாக உறுதியளித்தே தேசிய மக்கள் சக்தி, பண வெகுமதிகளை வழங்கி பழைய நெறிமுறைகளையே பின்பற்றுவதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ)

# நிலந்த ஜயவர்த்தன மீதான விசாரணை ஒக்ரோபரில்!

கொழும்பு, ஜூன் 14

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஏற்கனவே அறிந்திருந்தும் அதனை தடுக்கத் தவறியமை தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கின் விசாரணை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் ரொஹான் சில்வா மற்றும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட சுராஜ் நிலங்க ஆகியோரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவிருக்கும் காலம் மிகவும் சவாலானது!

## சுகாதார அமைச்சரிடம் ஐ.நா. பிரதிநிதி



கொழும்பு, ஜூன் 14

**கடந்த தேர்தலில் வழங்கப்பட்ட மக்கள் ஆதரவுடன், நாட்டில் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதால், வரவிருக்கும் காலம் சவாலானதாக இருக்கும். நாட்டில் நிலையான அமைதியை மேம்படுத்துவதற்கான புதிய அரசாங்கத்தின் முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஆதரவையும் வழங்கும் என்று ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்சே சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன் தினம் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டின் அரச மருத்துவமனைகளில் அடுத்த ஆண்டில் தொடர்ச்சியான மருந்து வினியோகத்தை பராமரிக்க தேவையான அனைத்து திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அரசு மருத்துவமனைகளால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் மருந்துகள் உயர் தரமானவை என்றும், மருந்துகளை கொள்வனவு செய்வதில் இருந்து மருந்துகளை வழங்குவது வரையிலான செயல்முறை தற்போது மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதார அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, நாட்டின் சுகாதார சேவை மற்றும் ஊடகத் துறையின் தற்போதைய நிலை, அத்துடன் நாட்டின் சுகாதார மற்றும் ஊடகத் துறைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு ஐக்கிய நாடுகள் சபை வழங்கும் ஆதரவு மற்றும் மானியங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. சுகாதாரத் துறையில் எழுந்துள்ள சிக்கல் நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

எத்தகைய தடைகள் மற்றும் சவால்கள் எழுந்தாலும், இந்த நாட்டு மக்களுக்கு தரமான மற்றும் சிறந்த சுகாதார சேவைகளை வழங்க பாடுபடுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரம், சமூகம், கலாசாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் சுகாதாரத் துறையின் எதிர்கால முன்னேற்றங்களுக்காக ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பணியாற்றுவது இலங்கைக்கு ஒரு பெரிய சாதனை என்று அமைச்சர் மேலும் கூறினார்.

கடந்த தேர்தலில் வழங்கப்பட்ட மக்கள் ஆதரவுடன், நாட்டில் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதால், வரவிருக்கும் காலம் சவாலானதாக இருக்கும் என்றும், வதிவிட ஒருங்கிணைப்பாளர் சுகாதார மற்றும் ஊடக அமைச்சரிடம் சுட்டிக் காட்டினார். நாட்டில் நிலையான அமைதியை மேம்படுத்துவதற்கான புதிய அரசாங்கத்தின் முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஆதரவையும் வழங்கும் என்றும் வதிவிட ஒருங்கிணைப்பாளர் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் இலவச சுகாதார சேவைக்காக அதிக அளவு பணத்தை ஒதுக்கியுள்ளது.

வரும் காலத்தில் நாட் டில் சுகாதாரப் பராமரிப்பு முறையில் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறது. அந்த மாற்றத்தில் ஒரு நீண்டகால நண்பராக தன்னால் முடிந்த அதிகபட்ச ஆதரவை தொடர்ந்து வழங்குவேன் என்றும் அமைச்சரிடம் மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# தேசபந்து தொடர்பான விசாரணை நான்கு பேர் சாட்சியம் வழங்கினர்

கொழும்பு, ஜூன் 14

பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துர்நடத்தை மற்றும் பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழு முன்னிலையில் நான்கு சாட்சிகள் நேற்று முன்தினம் சாட்சியமளித்தனர்.

உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி.சூரசேன தலைமையில் மற்றும் நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி.இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஈ.டபிள்யூ.எம் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் உள்ளடக்கிய குழு நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் கூடியபோது, மு.ப 9.30 மணி முதல் பி.ப 8.00 மணி வரை இவ்வாறு சாட்சியமளிக்கப்பட்டது.

இதன்போது, விசாரணைக் குழுவும், சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விசாரணையில் பங்கெடுத்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் (ஜனாதிபதி சட்டத்தரணி) திலீப பீரிஸ் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரஜித பெரேரா ஆகியோரும், பிரதி வாதியான பொலிஸ்மா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.எஸ்.வீரவிக்ரம ஆகியோரும் சாட்சியாளர்களிடம் குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விசாரணைகள் முடியும் வரை எதிர்வரும் 16ஆம் திகதி முதல் விசாரணைக் குழுவை நாளாந்தம் கூட்டுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

## கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

# ஆவணங்களை சோதனையிட 28 சி.ஐ.டி. குழுக்கள் களத்தில்!

ஜனாதிபதி பொது மன்னிப்பை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைவாக குற்றப்புல னாய்வு திணைக்களத்தின் 28 குழுக்கள் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பொது மன்னிப்பை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் குழுக்களால் சிறைச்சாலைகளிலுள்ள ஆவணங்கள் சோதனைக்குட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு கிடைக்காத அனுராதபுரம் சிறைச்சாலை யின் கைதியொருவர் வெசாக் பூரணை தினத்தில் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் தற்போது சர்ச்சை எழுந்துள்ள நிலையில் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமையவே குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் 28 குழுக்கள் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

முன்னதாக இந்த சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் மொஹான் கருணாரத்னவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# முன்னாள் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க மறைவு!

கொழும்பு, ஜூன் 14

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தனது 91 ஆவது வயதில் காலமானார்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்க இராணுவத்தின் 11ஆவது இராணுவத் தளபதியாக இருந்தார்.

இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டத்தில், 1988 முதல் 1991 வரை இராணுவத் தளபதியாக ஜெனரல் வனசிங்க பணியாற்றினார்.

இவர் பாதுகாப்புச் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட முக்கிய தேசிய பாதுகாப்புப் பொறுப்புகளை வகித்தார்.

இவர், தனது சேவை மற்றும் தலைமைத்துவத்திற்காக இலங்கை இராணுவத்தின் உயர் விருதுகளையும் பெற்றுள்ளார். (அ)

# எலிக்காய்ச்சல் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் எலிக்காய்ச்சல் தொற்று அதிகரித்து வருவதாகவும், காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் நோயைத் தடுக்க உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நோயைப் பரப்பும் பக்ரீறியா பல்வேறு வழிகளில் மனித உடலுக்குள் நுழைவதாகத் தொற்று நோயியல் விஞ்ஞான பிரிவின் ஆலோசகர் துசானி தாப்ரே தெரிவித்தார்.

இந்த நோயினால் அதிகமாக இரத்தினபுரி, குருநாகல், கேகாலை மற்றும் களுத்துறை பகுதிகளைச் சேர்ந்தவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே அதிக காய்ச்சல், தலைவலி, மூட்டு வலி, தசை வலி மற்றும் கண்கள் சிவத்தல் போன்ற அறிகுறிகளைப் புறக்கணிக்கக் கூடாது என்றும், நோயைத் தடுக்க உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# வடக்கு காணி வர்த்தமானி இரத்து குறித்து அமைச்சரவையிடம் அபிப்பிராயம் கோருக!

## சட்டமா அதிபர் காணி அமைச்சுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

வடக்கிலுள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வது குறித்து அமைச்சரவை அமைச்சர்களின் கருத்தினை அறியுமாறு சட்டமா அதிபர் கமத் தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக் குள் எவரும் உரிமை கோராது விடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப் படுத்தப்படும் என அரசாங்கத்தின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் அவ்வர்த்த மானி அறிவித்தலை முழுமையாக வாபஸ் பெறவேண்டும் எனக் கோரி வலியுறுத்தி எதிர்ப்பை அடுத்து, அவ்வர்த்த மானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதனை இரத் துச்செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போது வரை வெளியிடப்படவில்லை.

அதேபோன்று வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப்பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால் காந்தவினால் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின்போது இவ்விவகாரம் பற்றி எந்தவொரு விசேட கூற்றும் வெளியிடப்படவில்லை.

இதனிடையே இவ்வர்த்த மானி அறிவித்தல் நீக்கம் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குமாறுகோரி கடந்த மாதம் 26 ஆம் திகதி கமத்தொ ழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டி.பி.விக்ரமசிங்க சட்டமா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இன்னமும் வர்த்தமானி அறிவித்தல் இரத்துச்செயப்படாத நிலையில், இதுபற்றி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடமும், பிரதமர் அலுவலகத்தின் உதவிச்செயலாளர் மிஹிரி தென்னக்கோனிடமும் குறுந்தகவல் ஊடாக விளக்கம் கோரியிருந்தார்.

அதற்குப் பதிலளித்துள்ள பிரதமர் அலுவலகத்தின் உதவிச்செயலாளர் மிஹிரி தென்னக்கோன், இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்களின் கருத்தினை அறியுமாறு சட்டமா அதிபர் காணி அமைச்சுக்கு அறிவித்திருப்பதாகவும், அதற்குரிய நடவடிக்கைகள் காணி அமைச்சினால் முன்னெடுக் கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணி தொடர்பான வர்த்தமானி:

# நடைமுறையாக்கத்துக்கு தடை கோரி மனு தாக்கல்

கொழும்பு, ஜூன் 14

**வடக்கின் 4 மாவட்டங்களில் காணிகளை சுவீகரிப்பு செய்வதற்கு பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிப்பை இடைநிறுத்தும்படியும் செல்லுபடிற்றதாக அறிவிக்குமாறும் கோரி உயர்நீதிமன்றில் அடைப்படை உரிமைகள் மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தாக்கல் செய்துள்ளார்.**

இந்த மனுவில் காணி ஆணையாளர் நாயகம், காணி உரித்து நிர்ணய ஆணையாளர், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டி.பி. விக்ரமசிங்க, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே. டி. லால்காந்த, வடமாகாண காணி நிர்வாக காணித்திணைக்கள ஆணையாளர் ஏ. சோதிநாதன், யாழ். மாவட்ட செயலாளர் (பதில்) எம். பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் எஸ். முரளிதரன், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ஏ. உமாமகேஷ்வரன், மன்னார் மாவட்ட செயலாளர் கே. கனகேஸ்வரன் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப் பட்டுள்ளனர்.

அத்துடன், வர்த்தமானியுடன் தொடர்புபட்டதாக பிரதிவாதிகளால் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகள் சட்டவிரோதமானவை - தன்னிச்சையானவை - நியாயமற்றவை - அடிப்படை மனித உரிமைகளுக்கு முரணானவை என அறிவிக்குமாறும் இந்த மனுமீதான முழுமையான விசாரணைகளை அடுத்து இறுதித்தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை வர்த்தமானியில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத்தடை விதிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

முன்னதாக, வட மாகாணத்தில் மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அரசாங்கத்தின் காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் 28ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430/25 எனும் இலக்க வர்த்தமானியில் அறிவித்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக மீளப்பெற வேண்டும் எனக்கோரி வலுப்பெற்ற எதிர்ப்பை அடுத்து, அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதனை இரத்துச்செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போதுவரை வெளியிடப்படவில்லை. இதே போன்று வட, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால் காந்தவால் வாக்குறுதி அளிக்கப்பட்டவாறு கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின்போது இவ்விவகாரம் பற்றி எந்தவொரு விசேட கூற்றும் வெளியிடப்படவில்லை. இந்த நிலையிலேயே எம். ஏ. சுமந்திரன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## அகமதாபாத் விமான விபத்து; ஜனாதிபதி அநுர இரங்கல்!

கொழும்பு, ஜூன் 14

இந்திய விமான விபத்து குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வருத்தமும், தனது இரங்கலையும் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் எக்ஸ் பதிவில் கூறியுள்ளதாவது-

அகமதாபாத் அருகே எயார் இந்தியா விமானம் ஏ.ஐ. 171 விபத்துக்குள்ளானமை தொடர்பில் நான் மிகவும் வருத்தமடைந்துள்ளேன்.

விமானத்தில் பாதிக்கப்பட்ட அனைவரின் குடும்பங்களுக்கும் எங்கள் மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த துயரத்தால் உயிர்களையும் எதிர்காலத்தையும் இழந்த இளம் மருத்துவ மாணவர்கள் உட்பட, தரையில் உயிரிழந்த பொதுமக்களின் துயரங்களும் அதே அளவு வேதனையளிக்கின்றன.

இந்த ஆழ்ந்த துக்கத்தின் தருணத்தில், இலங்கை மக்கள் இந்தியாவுடன் ஒற்றுமையுடன் நிற்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட அனைவருடனும் எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உள்ளன- என்று பதிவிட்டுள்ளார். (அ)

## பொலிஸ் அதிகாரியை மிரட்டிய எம்.பி. தொடர்பில் விசாரணை!

கொழும்பு, ஜூன் 14

சட்டவிரோத மதுபான வியாபாரி ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததற்காக வெலிபென்ன பொலிஸில் பணிபுரியும் ஒரு பொலிஸ் சார்ஜன்டை திட்டியதாகக் கூறப்படும் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் சட்டவிரோத மதுபான வர்த்தகத்தில் ஈடுபட்ட ஒரு சந்தேக நபரை பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்ததை அடுத்து, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ ரணசிங்க அவரை கடும் வார்த்தைகளால் திட்டியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் சார்ஜன்ட், சம்பவம் குறித்து வெலிபென்ன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு அளித்தார்.

அதன்படி, வவுனியாவுக்கு இடமாற்றம் செய்வதாக சார்ஜன்டை பாராளுமன்ற உறுப்பினர் மிரட்டியதாகக் கூறப்படுகிறது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து சார்ஜன்டின் எண்ணைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர் இந்த மிரட்டலை விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த எம்.பி., பொலிஸ் அதிகாரியை அழைத்து, அஜித் என்ற பொலிஸ் அதிகாரியின் வீடு உட்பட விவரங்களைக் கேட்டறிந்ததாகவும், பின்னர் தனிநபர்கள் மீது பொய் வழக்குகளைப் பதிவு செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டியதாகவும் கூறப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி தன்னை கடுமையாகக் மிரட்டியதாகவும், இடமாற்ற அச்சுறுத்தலை மீண்டும் வலியுறுத்தியதாகவும் சர்ஜென்ட் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினருக்கும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் இடையிலான உரையாடல், சார்ஜன்டின் குற்றச்சாட்டுகள் ஆகியவை பொலிஸ் தகவல் புத்தகத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, வெலிபென்ன பொலிஸ் அதிகாரியிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும், உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் முறையான விசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு

### பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி சிறந்த நபர் ஒருவரை மேயராக பெயரிடும் பட்சத்தில் நிச்சயமாக பொதுஜன பெரமுன எதிர்க்கட்சி உறுப்பினருக்கு ஆதரவளிக்குமென பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையில் மேயர் தெரிவின்போது பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஆளும் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் எதிர்க்கட்சியினால் மாநகர சபையில் ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே நாங்கள் இருக்கிறோம்.

தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு எதிர்க்கட்சியில் இருந்து அதிக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பது ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தாகும்.

அதனால் ஆட்சி அமைப்பது தொடர்பான பிரதான பொறுப்பு இருப்பது அவர்களுக்காகும்.

அது தொடர்பில் எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை.

என்றாலும் ஐக்கிய மக்கள் சக்தியால் மாநகர மேயராக பெயரிடப்படுபவர், அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, நேர்மையானவராக இருக்க



வேண்டும் என்பதுடன் ஊழல் மோசடிகளுடன் தொடர்பற்றவாரக இருந்தால், நிச்சயமாக மேயர் தெரிவில் வெற்றி பெற்று, எதிர்க்கட்சிக்கு ஆட்சி அமைக்க முடியுமாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி பெயரிடும் மேயருக்கு நாங்கள் ஆதரவளிப்பது, ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பது என்ற அடிப்படையில் அல்ல. மாறாக எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற அடிப்படையிலாகும்.

அதனாலே மேயராக பெயரிடும் போது, வேறு சர்ச்சைகளுக்கு ஆளாகாத, அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியுமான நபரை நியமிக்குமாறு தெரிவித்து வருகிறோம்.

அதனால் கொழும்பு மாநகர சபை எதிர்வரும் 16ஆம் திகதி மாநகர ஆணையாளர் தலைமையில் கூடி, மேயர் தெரிவு இடம்பெற இருக்கிறது. அதன் போது நாங்கள் தெரிவித்தது போல் ஐக்கிய மக்கள் சக்தி சிறந்த நபர் ஒருவரை மேயராக பெயரிடும் பட்சத்தில் நிச்சயமாக பொதுஜன பெரமுன எதிர்க்கட்சி உறுப்பினருக்கு ஆதரவளிப்போம்-என்றார். (அ)

## சவர்க்கார வகை தொடர்பில் முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜூன் 14

சந்தையில் காணப்படும் சவர்க்காரங்களின் லேபிள்களில் உள்ள தவறான தகவல்கள் குறித்து பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் முதற்கட்ட கலந்துரையாடல் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவர்க்காரங்களின் தரத்தை மேம்படுத்துதல், நுகர்வோரை தவறாக வழிநடத்தும் வகையில் லேபிளில் தகவல்களை உள்ளடக்காமல் இருத்தல், குழந்தைகளுக்கான சவர்க்காரம் உள்ளிட்ட பிற சவர்க்காரங்களுக்கு இலங்கை தரநிலைகளை கட்டாயமாக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில், சுகாதார அமைச்சு, மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் பிரபலமான சவர்க்கார உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறுவரை தொழில்களில் ஈடுபடுத்துவதற்குத் தடை

### அமைச்சர் சாவித்திரி போல்ராஜ்

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் உள்ள சிறுவர்களை தொழில்களில் ஈடுபடுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வீதிகளில் யாசகம் பெறும், வர்த்தகம் செய்யும் மற்றும் பிற பாதுகாப்பற்ற வேலைவாய்ப்பு துறைகளில் ஈடுபடும் சிறுவர்களுக்கு தற்காலிக நன்கொடைகளை வழங்குவதற்குப் பதிலாக, கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு உரிமைகளுக்கான அவர்களின் உரிமைகளை உறுதி செய்வதை எங்கள் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த சேவைகளை மிகவும் தரமானதாக மாற்றுவதற்கான எதிர்காலத் திட்டங்கள் குறித்து பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு, தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு ஆணையம், நன்னடத்தை மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பு சேவைகள் மற்றும் ஊடகங்கள் இணைந்து செயல்பட்டன.

மேலும் இதன் நோக்கம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

சிறுவர்களுக்கு கட்டாய கல்வியை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைக்கு உடன்பட்டும் கூட்டணிக்கு வரவில்லை!

## ஐ. த. தே. கூட்டணி குறித்து தமிழ் அரசுக் கட்சி

திருகோணமலை, ஜுன் 14

**ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் (சங்கு) திருகோணமலை மாநகர சபையில் தமக்கு துணை முதல்வர் பதவி தரவேண்டும் எனக் கேட்டிருந்தார்கள். தரலாம் என்று கூறியிருந்தோம். ஆனால், இதுவரை தொடர்பு இல்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.**

இதேவேளை, திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச சபையில் இரண்டு ஆண்டுக்கு தவிசாளர் பதவி தரவேண்டும் எனக் கேட்டிருந்தார்கள். தரலாம் எனக் கூறியிருந்தோம்.

மூதூர் பிரதேச சபையில் இரண்டு ஆண்டுகளுக்கு துணைத் தவிசாளர் பதவி தரவேண்டும் எனக் கேட்டிருந்தார்கள். அதுவும் தரலாம் எனக் கூறியிருந்தோம்.

மேற்படி விடயங்களை இறுதியாக ஜுன் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வைத்து செல்வம் அடைக்கலநாதன் எம்.பியிடம் கூறியிருந்தேன்.

அவர் என்னைஜுன் 08 ஆம் திகதி திருகோணமலையில் சந்திப்பதாக கூறியிருந்தார். எனினும், அவர் சந்திக்கவில்லை. பலமுறை நான் தொலைபேசியில் அழைத்தும் பதில் இல்லை எனவும் கூறினார்.

திருகோணமலையில் உள்ள கட்சிப் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

உள்ளூராட்சி தேர்தல் பரப்புரைக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் அண்ணளவாக ஐம்பது சிறு பரப்புரைக் கூட்டங்களில் நான் பங்கு கொண்டிருந்தேன். அனைத்து கூட்டங்களிலும் மக்கள் கேட்ட கேள்வி தேர்தலுக்குப் பின்பு தவிசாளர் தெரிவுகள் எப்படி இடம்பெறும் என்பதாகும். அதற்கு நான் "ஒவ்வோர் உள்ளூராட்சி சபைக்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒன்று கூடி ஜனநாயக முறைப்படி தமக்குள் ஒருவரைத் தெரிவு செய்வர் "என்று கூறியிருந்தேன் .

மேற்படிக் கருத்தை திருகோணமலையில் உள்ள புத்திஜீவிகளும் தமிழ் அரசுக் கட்சியின் நலன் விரும்பிகளும் மிகப் பெரும்பான்மையான கட்சி உறுப்பினர்களும் என்னிடம் வலியுறுத்தியிருந்தார்கள் என்பதனை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தம் என நம்புகின்றேன்.

இதற்கமைய வெருகல் பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒன்று கூடி சேனுராமன் கருணாநிதி என்பவரைத் தவிசாளராக தெரிவு செய்தனர் .

மூதூர் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒன்று கூடி செல்வரத்தினம் பிரகலாதன் என்பவரைத் தவிசாளர் பதவிக்கான தமது வேட்பாளராக முன்மொழிந்தனர்.

திருகோணமலை மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒன்று கூடி கந்தசாமி செல்வராஜா என்பவரைத் தமது முதல்வர் பதவிக்கான வேட்பாளராக முன்மொழிந்தனர்.

பட்டனமும் சூழலும் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒன்று கூடி துரைராசா தனராஜ் என்பவரைத் தமது தவிசாளர் பதவிக்கான வேட்பாளராக முன்மொழிந்தனர்.

குச்சவெளிப் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒன்று கூடி ஜெகதீசன் நிமலஹாசன் என்பவரைத் தமது தவிசாளர் பதவிக்கான வேட்பாளராக முன்மொழிந்தனர்.

இந்தத் தெரிவுகள் ஜனநாயக முறைப்படி நடைபெற்றன- என்றார். (எ)



# "பிடியளவு கமநிலத்துக்கு" தேசிய திட்டம் முன்னெடுப்பு

திருகோணமலை, ஜுன் 14

"பிடியளவு கமநிலத்துக்கு" எனும் தொனிப்பொருளின் கீழ், உணவினால் பாதுகாக்கப்பட்டதொரு தேசத்தை உருவாக்கும் பொருட்டு, பயிரிடப்படாத சகல கமத்தொழில் காணிகளையும் வினைத்திறனாகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தல் எனும் தேசிய வேலைத்திட்டம் திருகோணமலை கிண்ணியா - குறிஞ்சாகேணி கமநல சேவை பிரிவிலும் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது.

குறிஞ்சாக்கேணி கமநல சேவை திணைக்களத்தின் ஏற்பாட்டில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஜே. எம். சாஜித் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

குறிஞ்சாக்கேணி பிரதேச கமநல சேவை பிரிவுக்குட்பட்ட பகுதியில் இதுவரை பயிர் செய்யப்படாத, வயல் காணிகள் மற்றும் மேட்டுநில காணிகள் கமநல சேவை அதிகாரிகளால் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு, விவசாயிகளுக்கு அறிவித்தல் கடிதங்கள் வழங்கப்பட்டதோடு, தரிசு நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளாமைக்கான காரணங்களும் கேட்டறியப்பட்டன.

இதற்கிணங்க, நேற்று முன்தினம், அடையாளம் காணப்பட்ட இந்த நிலங்களில், பயிர் செய்வதற்காக தேவையான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, இது தொடர்பில் விவசாயிகளுக்கு தெளிவூட்டல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தேசிய வேலைத் திட்ட நிகழ்வில், விவசாய போதனாசிரியர்கள், கமநல சேவை திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், பிரதேச விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)



# அ.இ.ம.கா. கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

திருகோணமலை, ஜுன் 14

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் நாடளாவிய ரீதியில் தெரிவான உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தலைமையில் கடந்த 11 ஆம் திகதி திருகோணமலை ஜேகப் பார்க் ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தும் போட்டியிட்டு, நாடளாவிய ரீதியில் தெரிவான 140 உள்ளூராட்சி உறுப்பினர்கள் ரிஷாட் பதியுதீன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (எ)

# தேசிய கூடைப்பந்தாட்ட தொடரில் அம்பாறை அணி சம்பியனானது

காரைதீவு, ஜுன் 14

இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 23 வயதுக்குட்பட்ட வீரர்களை உள்ளடக்கிய தேசிய மட்ட கூடைப் பந்தாட்ட போட்டியில் அம்பாறை மாவட்ட அணி முதலிடத்தைப் பெற்று சம்பியனானது.

அம்பாறை மாவட்ட கூடைப் பந்தாட்ட அணியாக காரைதீவு கூடைப்பந்தாட்ட கழக அணியினர் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

இலங்கையின் 15 மாவட்டங்களின் பங்குபற்றுதலுடன் மாத்தறையில் கடந்த 9, 10, 11, 12 ஆகிய திகதிகளில் இந்தச் சுற்றுப் போட்டி தொடர் நடைபெற்றது.

இந்தத் தொடரில் அம்பாறை மாவட்டத்தை பிரதி நிதித்துவப் படுத்தும் காரைதீவு அணியானது குழு ஏ யில் இடம்பிடித்து முதலாவது போட்டியில் வவுனியா மாவட்ட அணியினரு டன் மோதி 19: 74 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி 2ஆவது போட்டியில் மாத்தளை மாவட்ட அணியுடன் மோதியது. இதில், 71: 25 எனும் அடிப்படையில் மாத்தளை மாவட்ட அணியை 46 புள்ளிகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அம்பாறை மாவட்ட அணி காலியிறுதி போட்டிக்குத் தெரிவானது.

காலியிறுதி போட்டியில் நுவரெலியா மாவட்ட அணியை அம்பாறை மாவட்ட அணி எதிர்கொண்டு 59: 40 எனும் புள்ளி அடிப்படையிலும் அரையிறுதி போட்டியில் மாத்தறை மாவட்ட அணியை 58: 46 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.



இறுதிப்போட்டியானது நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாத்தறையில்நடைபெற்றது.

இதில், அம்பாறை மாவட்ட அணியானது பதுளை மாவட்ட அணியை 53: 50 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

வரலாற்றில் முதல் தடவையாக காரைதீவு கூடைப்பந்தாட்ட அணி தேசிய ரீதியில் சம்பியனாக வெற்றி வாகை சூடியதையிட்டு பல தரப்பினரும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். (எ-08)

# வெருகல் பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி வெற்றி

## குகதாசன் எம். பி. தெரிவிப்பு

திருகோணமலை, ஜுன் 14

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெருகல் பிரதேச சபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. இதில் கடந்த திங்கட்கிழமை அதாவது ஜுன் 09 ஆம் திகதி ஆட்சி அமைத்துவிட்டோம் என அந்தக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள கட்சிப் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்



போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

திருகோணமலை மாநகர சபை, பட்டனமும் சூழலும் பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை ஆகியவற்றில் தமிழ் அரசுக் கட்சி தனிப் பெரும்பான்மை கட்சியாக வெற்றி பெற்றுள்ளது.

குச்சவெளிப் பிரதேச சபையில் 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் இரண்டு வட்டாரங்களில் மட்டும் வெற்றி பெற்றிருந்தோம். இம்முறை நான்கு வட்டாரங்களில் வெற்றி பெற்றுள்ளோம் .

மேற்படி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக அந்தந்த சபைகளில் உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சிகளோடு பேச்சுக்கள் நடத்தி வருகின்றோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான்மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்; மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம்

## இஸ்ரேலில் அவசரநிலை பிரகடனம்

தெஹ்ரான், ஜூன் 14

**ஈரானின் அணுசக்தி திட்டங்களை குறிவைத்து இஸ்ரேல் கடும் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால், மத்திய கிழக்கு நாடுகளில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது. ஈரான் பதில் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் இஸ்ரேலில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.**

கடந்த சில ஆண்டுகளாக இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் தொடர்ந்து வருகிறது. ஹமாஸின் முக்கிய தளபதிகள் அனைவரும் கொல்லப்பட்டுள்ள நிலையில், இந்த மோதல் தற்போது முடிவுக்கு வரும் சூழல் நிலவுகிறது.

இதற்கிடையே மத்திய கிழக்கில் மற்றும் மேலும் அழிவுகரமான இராணுவ மோதல் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் ஈரானின் அணுசக்தி திட்டத்தைக் கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் பேச்சுக்கள் நடத்தி வருகிறது.

இதற்கிடையே ஈரானில் அணு ஆயுதங்கள் உள்ள இடங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என்று அமெரிக்க உளவுத்துறை சந்தேகம் தெரிவித்து வந்தது. ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருந்தால் அது ஆபத்தாக மாறும் என ட்ரம்ப் கருதுகிறார். இதன் காரணமாகவே ஈரான் உடன் ட்ரம்ப் தொடர்ச்சியாகப் பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

இந்தப் பேச்சுக்களில் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்றால் அமெரிக்காவின் ஒப்புதல் இல்லாமலேயே ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தக்கூடும் என்று வாஷிங்டன் போஸ்ட் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் சூழலில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான அணுசக்தி பேச்சுக்கள் திட்டமிட்டபடி செல்லவில்லை. இது ட்ரம்ப் நிர்வாகத்துக்குக் கவலையளிப்பதாக இருந்தது. ஈரான் அணு ஆயுதம் வைத்திருக்க அமெரிக்கா அனுமதிக்காது என்பதில் ட்ரம்ப் திட்டவட்டமாக உள்ளார். இதனால், பேச்சுக்கள் சுமுகமாகப் போகவில்லை என்றால் மீண்டும் ஒரு மோதல் நடக்கும் என்று அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே இடம்பெற்று வரும் பேச்சுக்கள் தோல்வியடைந்தால், இஸ்ரேல் உடனடியாக ஈரான் மீது தாக்குதல் நடத்தத் தயாராகி வருவதாகக் கடந்த மாதம் தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில், ஈரானின் இதயமாக கருதப்படும் அணுசக்தி திட்டங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஈரானின் தெஹ்ரானில் மக்கள் குண்டுவெடிப்பு சத்தத்தைக் கேட்டு அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். அந்த நாட்டு அரசு தொலைக்காட்சி குண்டு வெடிப்பை உறுதி செய்துள்ளது. என்ன நடந்தது என்பது குறித்து உறுதியான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இந்தச் சூழலில் ஈரான் பதில் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் இஸ்ரேலில் அவசர நிலை பிரகடனம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே ஈரானின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை உற்பத்தி செய்யும் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் ஈரான் மீதான தாக்குதல் தொடரும் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "இஸ்ரேல் ஒப்ரேஷன் ரைசிங் லயன் என்ற இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது. இது இஸ்ரேலின் உயிர் வாழ்வுக்கான ஈரானிய அச்சுறுத்தலை முறியடிக்க இலக்கு வைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையாகும். இந்த அச்சுறுத்தலை நீக்க இந்த நடவடிக்கை எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் தொடரும்"- என்று நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல் நடத்தியதால், மத்திய கிழக்கு நாடுகளில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு நாங்கள் காரணமில்லை என்றும் அமெரிக்காவை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தக்கூடாது என்றும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ)

# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்; ஈரான் இராணுவ அதிகாரி பலி!



தெஹ்ரான், ஜூன் 14

இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் ஈரான் இராணுவ அதிகாரி ஹொசைன் சலாமி உயிரிழந்தார்.

தெஹ்ரானில் உள்ள ஈரானிய இஸ்லாமிய புரட்சிகர காவல் படை தலைமையகத்தில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஈரானிய இஸ்லாமிய புரட்சிகர இராணுவ அதிகாரி ஹொசைன் சலாமி உயிரிழந்ததாக தகவல் வெளியானது. மேலும், பல இராணுவ அதிகாரிகள் உயிரிழந்திருக்கலாம் எனவும் உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சூழலில் ஈரான் பதில் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் இஸ்ரேலில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.



# போராட்டத்தில் வன்முறை 40 பொலிஸார் படுகாயம்

லண்டன், ஜூன் 14

இங்கிலாந்தில் இடம்பெற்ற போராட்டத்தில் திடீரென வன்முறை வெடித்தது. இதனால், 40 பொலிஸார் படுகாயமடைந்தனர்.

இங்கிலாந்தின் பாலிமெனா நகரில் பெண் ஒருவர் வன்புணர்வு செய்யப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 3 நாட்களாக போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையே வெளிநாட்டைச் சேர்ந்த 3 சிறுவர்கள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது. எனவே, புலம்பெயர் தொழிலாளர்களின் வீடு, அலுவலகங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இதனால், அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

இதனைக் கட்டுப்படுத்த முயன்றபோது பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் இதுவரை 40 இற்கும் மேற்பட்ட பொலிஸாருக்கு படுகாயம் ஏற்பட்டது. இதனால் பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசி போராட்டக்காரர்களை விரட்டினர். இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு கருதி அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (எ)

# விமான விபத்தில் 241 பேர் உயிரிழப்பு

## ஏர் இந்தியா அதிகாரபூர்வ அறிவிப்பு

அகமதாபாத், ஜூன் 14

விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர் என்று ஏர் இந்தியா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ளது சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச விமான நிலையம்.

இந்த விமான நிலையத்திலிருந்து, ஏர் இந்தியா நிறுவனத்துக்குச் சொந்தமான ட்ரீம்லைனர் விமானம் ஒன்று லண்டனுக்கு நேற்று முன்தினம் மதியம் 230 பயணிகள், 10 பணியாளர்கள் மற்றும் 2 விமானிகள் என மொத்தம் 242 பேருடன் பயணித்தது.

புறப்பட்டு சில நிமிடங்களில் அந்த விமானம் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இந்த நிலையில் விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேரும் உயிரிழந்ததாக ஏர் இந்தியா நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மேலும், இந்தக் கோர சம்பவத்தில், விஷ்வாஸ் குமார் என்ற பயணி ஒருவர் மட்டும் உயிர்தப்பினார் என்றும், அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# உலகம் முழுவதும் 12 கோடி அகதிகள்

ஜெனிவா, ஜூன் 14

உலகம் முழுவதும் அகதிகளாக வெளியேறியவர்கள் 12 கோடி பேர் என்று ஐ.நா. அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது. இதில்,

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட சூடானில் ஒரு கோடியே 40 இலட்சம் பேர் அகதிகள் ஆகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. அகதிகள் ஆணையகம் உலகளாவிய அகதிகள் நிலவர அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது,

போர், வன்முறை, சித்திரவதை காரணமாக உலகம் முழுவதும் வீடுகளை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கு அகதிகளாக சென்றவர்கள் மற்றும் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை, கடந்த ஏப்ரல் மாத நிலவரப்படி 12 கோடியே 21 இலட்சமாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 12 கோடியாக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் இது இரட்டிப்பாகியுள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் இருந்த நிலவரப்படி, உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை 9 சதவீதம் அதிகரித்து, 7 கோடியே 35 இலட்சமாக இருந்தது. இந்த எண்ணிக்கை, பல ஆண்டுகளாக அகதிகளாக மாறியவர்கள் எண்ணிக்கை ஆகும். அவர்களில் சிலர் கடந்த ஆண்டு வீடுகளுக்கு திரும்பியபோதிலும், புதிதாக வேறு சிலர் வெளியேறி விட்டனர்.

ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ குடியேறும் நோக்கத்தில் பலர் வெளியேறியதாக பணக்கார நாடுகளில் ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால், தங்கள் நாட்டின் எல்லையை தாண்டிய மூன்றில் இரண்டு பங்குபேர் இன்னும் அண்டை நாடுகளில் தான் உள்ளனர்.

அதிகபட்சமாக, உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட சூடானில் ஒரு கோடியே 40 இலட்சம் பேர் அகதிகள் ஆகியுள்ளனர். அடுத்தபடியாக, சிரியாவில் ஒரு கோடியே 35 இலட்சம் பேரும் ஆப்கானிஸ்தானில் ஒரு கோடி பேரும் உக்ரைனில் 88 இலட்சம் பேரும் அகதிகளாக மாறினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கடந்த 6 மாதங்களில், 20 இலட்சம் சிரியா மக்கள், தங்களது வீடுகளுக்குத் திரும்பியிருப்பதால், நம்பிக்கை ஒளி தெரிவதாக ஐ.நா. அகதிகள் ஆணையக தலைவர் பிலிப்போ கிராண்டி தெரிவித்தார். (எ)

# எல்லையில் ஒலிபரப்பப்படும் எதிர்ப்பு பிரசாரம் நிறுத்தம்

## வடகொரியா - தென்கொரியா இணக்கம்

சியோல், ஜூன் 14

எல்லையில் ஒலிபரப்பப்படும் வடகொரிய எதிர்ப்பு பிரசாரத்தை தென்கொரியா நிறுத்தியது.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா அவ்வப்போது ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனை நடத்துகிறது. இதனைத் தொடர்ந்து தென்கொரிய எல்லைக்குள் இராட்சத குப்பை பலூன்களையும் பறக்க விட்டு மேலும் பதற்றத்தை தூண்டியது. இதற்கு பதிலடியாக பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வடகொரிய எதிர்ப்பு பிரசாரத்தை கடந்த ஆண்டு தென்கொரியா மீண்டும் தொடங்கியது. அதாவது தென்கொரிய எல்லைப் பகுதியில் வடகொரிய எதிர்ப்புப் பிரசாரம் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்பட்டு வந்தது. இந்தநிலையில் தென்கொரிய ஜனாதிபதி லீ ஜே-மியுங் வடகொரியாவுடனான உறவில் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் அமைதியை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறார். இதன் ஒரு பகுதியாக எல்லை பகுதியில் ஒலிபரப்பப்படும் வடகொரிய எதிர்ப்பு பிரசாரத்தை தென்கொரியா நிறுத்தியுள்ளது. இது இரு நாடுகளின் எல்லைப் பகுதியில் ஏற்படும் பதற்றத்தை தணிக்கும் நடவடிக்கை என தென்கொரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தென்னாபிரிக்கா தடுமாற்றம்

## 139 ஓட்டங்களுக்குள் சுருண்டது


லண்டன், ஜுன் 14

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் 139 ஓட்டங்களுக்குள் தென்னாபிரிக்க அணி சுருண்டது.

அவுஸ்திரேலியா- தென்னாபிரிக்கா இடையிலான 3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 56. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 212 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக வெப்ஸ்டர் 72 ஓட்டங்களும் ஸ்மித் 66 ஓட்டங்களும் எடுத்தனர். தென்னாபிரிக்கா தரப்பில் ரபாடா 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸை ஆடியது. பட் கம்மின்ஸின் அபார பந்து வீச்சால் தென்னாபிரிக்க அணி அடுத்தடுத்து விக்கெட் களை இழந்து திணறியது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 57. 1 ஓவர்களில் 138 ஓட்டங்களுக்கு ஆட்டமி ழந்தது. அதிகபட்சமாக பெடிங்கம் 45 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலிய அணி தரப்பில் பட் கம் மின்ஸ் அதிகபட்சமாக 6 விக்கெட்களை கைப்பற்றினார். இதையடுத்து அவுஸ்திரேலிய அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் விளையாடி வருகிறது. அந்த அணி நேற்று




முன்தினம் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால், தென்னாபிரிக்க அணியை விட அவுஸ்திரேலிய அணி 218 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. (எ)

# மே. இ. தீவுகள் - நேபாளம் ரி-20 தொடர் செப்ரெம்பரில்

கயானா, ஜுன் 14

நேபாள அணியுடன் மேற்கு இந்திய தீவுகள் அணி முதல் முறையாக ரி- 20 தொடரில் விளையாடவுள்ளது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி தற்போது அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டி கள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடர் நிறைவடைந்ததும் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் மற்றும் ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இதையடுத்து பாகிஸ்தான் அணி மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடு கிறது. இதனைத்தொடர்ந்து மேற்கு இந்திய தீவுகள் அணியானது நேபாள அணியுடன் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

இதன்மூலம் இவ்விரு அணிகளும் வரலாற்றில் முதல் முறையாக இருதரப்பு தொடரில் விளையாடவுள்ளன. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையேயான ரி -20 தொடர் செப்ரெம்பர் 27ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ரி - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு தயா ராகும் வகையில் இவ்விரு அணிகளும் இந்த ரி - 20 தொட ரில் விளையாடவுள்ளன. ரி - 20 உலகக் கிண்ணத் தொட ருக்கு மேற்கு இந்திய தீவுகள் அணி நேரடியாக தகுதி பெற்றுள்ள நிலையில், நேபாள அணியானது தகுதிச் சுற் றின் அடிப்படையில் தகுதிபெறும் வாய்ப்புள்ளது. (எ)

# 19 சிக்ஸர்கள் அடித்து பின் ஆலென் அசத்தல்

## சான் பிரான்சிஸ்கோ வெற்றி

கலிபோர்னியா, ஜுன் 14

வாஷிங்டன் ப்ரீடம் அணிக்கு எதிரான போட்டியில் 123 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சான் பிரான்சிஸ்கோ அணி அபார வெற்றி பெற்றது. இதில், 19 சிக்ஸர்கள் அடித்து பின் ஆலென் அசத்தினார்.

எம். எல். சி. என அழைக்கப்படும் மேஜர் லீக் ரி - 20 கிரிக்கெட் தொடரின் 3ஆவது சீசன் நேற்றுத் தொடங்கி யது. இதில் நேற்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் சான் பிரான்சிஸ்கோ யூனிகார்ன்ஸ் - வாஷிங்டன் ப்ரீடம் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சான் பிரான்சிஸ்கோ அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் களை இழந்து 269 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி தரப்பில் சிக்ஸர் மழை பொழிந்த பின் ஆலென் 51 பந்துகளில் 151 ஓட்டங்கள் குவித்தார். இதில் 19 சிக்ஸ ர்கள் அடங்கும்.

தொடர்ந்து 270 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வாஷிங்டன் ப்ரீடம் அணி 13.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 146 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதன் மூலம் 123 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சான் பிரான்சிஸ்கோ அணி அபார வெற்றி பெற்றது.

வாஷிங்டன் அணி தரப்பில் அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா 42 ஓட்டங்கள் எடுத்தார். சான் பிரான்சிஸ்கோ தரப்பில் ஹாரிஸ் ரவூப், ஹசன் கான் தலா 3 விக்கெட் கள் வீழ்த்தினர். (எ)

# அயர்லாந்து - மே. இ. தீவுகள் 2ஆவது ரி - 20 போட்டி இன்று

டப்ளின், ஜுன் 14

அயர்லாந்து - மேற்கு இந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2ஆவது ரி - 20 போட்டி இன்று நடைபெறவுள்ளது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி அயர்லாந் துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான முதல் ரி - 20 போட்டி நேற்று முன்தினம் இரவு நடை பெறயிருந்தது.ஆனால், மழை காரணமாக போட்டி இரத்து செய் யப்பட்டது.இந்த நிலையில், இரு அணிக ளுக்கும் இடை யேயான 2ஆவது ரி - 20 போட்டி இன்று நடைபெற வுள்ளது. (எ)

# அணித் தலைவராக மெஹிதி நியமனம்




டாக்கா, ஜுன் 14

பங்களாதேஷ் அணியின் தலைவராக மெஹிதி ஹசன் மிராஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.


பங்களாதேஷ் ரி - 20 கிரிக்கெட் அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து நஜ்முல் ஹூசைன் ஷான்டோ சமீபத் தில் விலகினார். இதனையடுத்து பங்களாதேஷ் ஒருநாள் போட்டி அணிக்கு புதிய தலைவரை நியமித்து பங்களா தேஷ் கிரிக்கெட் சபை அறிவிப்பு வெளியிட்டது.

இதன்படி, பங்களாதேஷ் ஒருநாள் அணியின் புதிய தலைவராக மெஹிதி ஹசன் மிராஸ் நியமிக்கப்பட்டுள் ளார். 27 வயதான மெஹிதி ஹசன் அடுத்த ஓர் ஆண்டுக்கு தலைவராக இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நஜ்முல் ஹூசைன் இல்லாத சமயத்தில் மெஹிதி ஹசன் 4 ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணியை வழி நடத்தியிருக்கிறார்.

அடுத்த மாதம் 2ஆம் திகதி முதல் பங்களாதேஷ் - இலங்கை அணிகள் மோதும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. இதிலிருந்து மெஹிதி ஹசன் அணி தலைவர் பொறுப்பை கவனிக்கவுள்ளார்.

## டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# 43 ஆண்டு கால சாதனையை முறியடித்தார் பட் கம்மின்ஸ்




லண்டன், ஜுன் 14

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 43 ஆண்டு கால சாதனையை அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் முறியடித்துள்ளார்.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் 3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னா பிரிக்கா அணிகள் மோதி வருகின்றன.

இதில், அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் 6 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். இதன் மூலம் அவர் 43 ஆண்டு கால சாதனை ஒன்றை முறியடித்துள்ளார். அதாவது, கம்மின்ஸ் முதல் இன்னிங்ஸில் 18.1 ஓவர்களில் 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 28 ஓட்டங்கள் மட்டுமே வழங்கி 6 விக்கெட்களை வீழ்த்தினார்.

புகழ்பெற்ற லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் ஓர் இன்னிங்ஸில் ஓர் அணித் தலைவரின் ஆகச்சிறந்த பந்து வீச்சு இதுவாகும். இதற்கு முன்பு 1982ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் இங்கிலாந்து அணித் தலைவர் பாப் வில்லிஸ் 101 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்கள் எடுத்ததே இந்த வகையில் சிறந்த பந்து வீச்சாக இருந்தது. 43 ஆண்டு கால அந்த சாதனையை கம்மின்ஸ் முறியடித்தார்.

மேலும், ஐ.சி.சி. நடத்தும் கிரிக்கெட் போட்டி தொடரில் இறுதிப்போட்டி ஒன்றில் சிறந்த பந்து வீச்சாகவும் இது அமைந்தது.

மேலும், கம்மின்ஸ் எடுத்த 6 விக்கெட்களையும் சேர்த்து டெஸ்டில் அவரது ஒட்டுமொத்த விக்கெட் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்தது.

இந்த மைல்கல்லை எட்டிய 40ஆவது வீரர், அவுஸ்தி ரேலிய அணியில் 8ஆவது பந்துவீச்சாளர் என்ற சிறப்பை யும் கம்மின்ஸ் பெற்றார். (எ)

# ஆர்ஜென்ரீனா அணியிடம் இந்தியா மீண்டும் தோல்வி

ஆம்ஸ்டர்டாம், ஜுன் 14

புரோ ஹொக்கி லீக் தொடரில் ஆர்ஜென்ரீனா அணியிடம் இந்தியா மீண்டும் தோல்வியடைந்தது.

9 அணிகள் பங்கேற்றுள்ள 6ஆவது புரோ ஹொக்கி போட்டியின் ஐரோப்பிய சுற்று நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்திய அணி மீண்டும் ஆர்ஜென்ரீனாவை சந்தித்தது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இந்தியா 3ஆவது நிமிடத்தில் கோல் அடித்தது. 9ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணி பதில் கோல் திருப்பி சமநிலை ஏற்படுத்தியது.

41ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணி மீண்டும் ஒரு கோல் அடித்தது. இதனால், முன்னிலை பெற்ற ஆர்ஜென்ரீனா, அதனை கடைசி வரை தக்க வைத்துக் கொண்டது. முடிவில் அந்த அணி 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தியது.

ஐரோப்பிய சுற்றில் இந்திய அணி தொடர்ச்சியாக சந்தித்த 4ஆவது தோல்வி இதுவாகும். ஏற்கனவே ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக முந்தைய ஆட்டத்திலும் நெதர்லாந்துக்கு எதிரான இரு ஆட்டங்களிலும் இந்திய அணி தோல்வியைச் சந்தித்தது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்...

தமிழ் அரசுக் கட்சியின் இராஜமனோகரன் ஜெயகரன் பிரதி தவிசாளராகவும் ஒருமனதாக தெரிவாகினர்.

சபையில் தவிசாளர் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டதை அடுத்து ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் சபை அமர்விலிருந்து வெளிநடப்பு செய்தார்.

20 உறுப்பினர்களைக்கொண்ட நல்லூர் பிரதேச சபையில் தமிழ் அரசு கட்சி சார்பில் 7, தமிழ் மக்கள் கூட்டணி 6, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன தலா 3, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஓர் உறுப்பினர் தெரிவாகியிருந்தனர். (ஐ)

## சாவகச்சேரி...

உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்கு போட்டியிட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியின் அ. கயிலாயபிள்ளை, தமிழ்த் தேசிய பேரவை சார்பில் வ. சிறீபிரகாஷ் ஆகியோர் போட்டியிட்டனர். வாக்கெடுப்பில், இருவருக்கும் தலா 7 உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர். இதனால், திருவுளச்சீட்டு மூலம் தவிசாளர் யார் என்று தீர்மானிக்கப்பட்டது. இதில், வ. சிறீபிரகாஷ் தவிசாளராக தெரிவானார்.

உபதவிசாளர் பதவிக்காக இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் அ. பாலமயூரன், தமிழ்த் தேசிய பேரவை சார்பில் ஞா. கிஷோர் ஆகியோர் போட்டியிட்டனர். இவர்களுக்கும் சமஆதரவே கிடைத்ததால், திருவுளச்சீட்டில் ஞா. கிஷோர் வெற்றி பெற்று, உப தவிசாளரானார்.

வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தி பங்கேற்காமல் நடுநிலை வகித்தது.

இதேசமயம், தமிழ்த் தேசிய பேரவை சார்பில் சாவகச்சேரி நகர சபைக்கு பிரேரிக்கப்பட்ட பெண் உறுப்பினர் அந்த சபையின் எல்லைக்குள் வசிக்காதவர் என்று தொடரப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் அவருக்கு இடைக்கால தடை விதித்தது. இதனாலேயே, இரு தரப்பிலும் சமமான எண்ணிக்கையிலான ஆதரவு கிடைத்தது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## யாழ்.மாநகர...

வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், மதிவதனிக்கு ஆதரவாக இலங்கை தமிழ் அரசு கட்சி (13 உறுப்பினர்கள்), ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (4 உறுப்பினர்கள்), ஐக்கிய தேசிய கட்சி ( ஓர் உறுப்பினர்), ஐக்கிய மக்கள் சக்தி (ஓர் உறுப்பினர்) ஆகியவை ஆதரவளித்தன. கனகையா சிறீ கிருஷ்ணாவுக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (12 உறுப்பினர்கள்), ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (4 உறுப்பினர்கள்) ஆதரவளித்தன.

வாக்கெடுப்பில், மதிவதனிக்கு ஆதரவாக 19 வாக்குகளும் சிறீ கிருஷ்ணகுமாருக்கு ஆதரவாக 16 வாக்குகளும் கிடைத்தன. இதனால், மதிவதனி யாழ். மாநகர முதல்வராக தெரிவானார்.

இதேசமயம் பிரதி முதல்வர் பதவிக்கு தமிழ் அரசு சார்பில் இமானுவல் தயாளன், தமிழ்த் தேசிய பேரவை சார்பில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் து. ஈசன் ஆகியோர் போட்டியிட்டனர். இதிலும், 19இற்கு 16 என்ற ஆதரவுடன் தமிழ் அரசு கட்சியின் இமானுவல் தயாளன் பிரதி முதல்வராக தெரிவானார்.

இந்த வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தி நடுநிலைமை வகித்தது.

45 உறுப்பினர்களைக்கொண்ட யாழ். மாநகர சபையில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெறவில்லை. தமிழ் அரசு கட்சி 13, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 12, தேசிய மக்கள் சக்தி 10, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகியன தலா 4, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியன தலா ஓர் உறுப்பினரை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆனையிறவு...

இது தொடர்பில் பலரும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர். இதைத் தொடர்ந்து, 'ஆனையிறவு உப்பு' என்று பெயர் மாற்றப்படும் என்று உறுதியளிக்கப்பட் டது. இந்த நிலையிலேயே ஆனையிறவு உப்பு என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

ஆனையிறவு உப்பு, வடக்கு மாகாணத்தில் முதல் கட்டமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது என்றும் அறிய வருகிறது. (ஐ)

## வழங்கிய...

தேவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூசை வழிபாட்டில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

மேலும், "ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்க அரசாங்கம் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், அந்த வாக்குறுதியை அரசாங்கம் இப்போது மறந்துவிட்டது போல தெரிகிறது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைகள் மறைக்கப்படுவதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை முழுமையான நீதி வழங்கப்படவில்லை - என்றும் அவர் சொன்னார். (அ-ஐ)

## ஈரான்...

படைகளின் (இராணுவம்) உயர் தளபதி, இரண்டாம் நிலை தளபதி உட்பட பலர் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

இதேநேரம், ஈரான் தலைநகர் தெஹ்ரானில் பல கட்டடங்கள் இடிந்து வீழும், தீப்பற்றி எரியும் காணொலிகள் பல வெளியாகியுள்ளன.

அணு ஆயுதத் திட்ட நிலையங்கள், ஏவுகணை தொழிற்சாலைகள், படைத் தலைமையகங்கள்மீது இஸ்ரேல் நடத்தியுள்ள இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட பேரழிவு ஈரானில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இதேசமயம், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் விஞ்ஞானிகள் மற்றும் குழந்தைகள் உட்பட 78 பொதுமக்கள் இறந்தனர். 329 பேர் காயமடைந்துள்ளனர் என்று ஈரான் அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலை நேரடியான 'போர் பிரகடனம்' என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கு பதிலடியாக நூற்றுக் கணக்கான ட்ரோன் விமானங்களால் இஸ்ரேலை தாக்கியிருக்கிறது தெஹ்ரான். எனினும், இஸ்ரேலிய வான் பாதுகாப்பு சாதனங்கள் அவற்றைத் தடுத்து அழித்திருக்கின்றன.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதல்களோடு அமெரிக்கா எந்த விதத்திலும் சம்பந்தப்படவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியிருக்கிறார். ஈரான் தன்னுடைய அணு ஆயுதத் திட்டம் தொடர்பில் அமெரிக்காவுடன் ஓர் இணக்கத்துக்கு வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள அவர், "தவறினால் மேலும் இதுபோன்ற அழிவுகளை சந்திக்க நேரிடும்", என்றும் எச்சரித்திருக்கிறார்.

எச்சரிக்கை விடுப்பதற்கு முன்னதாக ட்ரம்ப் தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தைக் கூட்டி இஸ்ரேலிய தாக்குதலுக்கு பிந்திய நிலைமைகளை ஆராய்ந்தார் என வெள்ளை மாளிகை அறிவித்தது.

இஸ்ரேலின் தாக்குதலுக்கான தனது பதிலடி எல்லை வரம்பு எதுவும் இருக்காது என ஈரான் எச்சரித்திருக்கிறது. இதனால் பிராந்தியத்தில் பெரும் போர் பதற்றம் தோன்றியுள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து, உலக சந்தையில் எண்ணெய் விலை 10 சதவீதத்துக்கும் மேல் உயர்ந்தது. எனினும், பின்னர் அது 7 சதவீதமாகக் குறைந்தது. முன்னர், உக்ரைன் - ரஷ்யா போரை தொடர்ந்தும் மசகு எண்ணெயின் விலை உயர்வடைந்தது. எனினும், பின்னர் குறைவடைந்தது. இதுபோல இந்த விலை உயர்வும் குறைவடையும் என்று பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# திலீபன் நினைவிடத்தில் நல்லூர் தவிசாளர் அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜூன் 14

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளராக தெரிவான ப. மயூரன் தியாகதீபம் திலீபன் நினைவிடத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு நேற்றைய தினம் நடைபெற்றது. இதில், தமிழ் மக்கள் கூட்டணியின் மயூரன் தவிசாளராக ஒருமனதாக தெரிவானார். இதைத் தொடர்ந்து, அவர் தியாகதீபனம் திலீபன் நினைவிடத்துக்கு சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். (ஐ)



## சரணடைந்தோர்...

கஹந்தகமகே ஆகிய நான் இந்த மனுவை மதிப்பிற்குரிய உங்கள் பணிமனைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

இது கடுமையான சர்வதேச மனிதாபிமான சட்டமீறலை குறிக்கிறது. இந்த சம்பவங்கள் சர்வதேச சட்டத்தின்கீழ் போர் குற்றங்களின் கீழ் அடங்கும் என்பதுடன், பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

இசைப்பிரியா, பாலச்சந்திரன் தொடர் பான சம்பவங்கள் போர் நேரத்தில் சரணடைந்தவர்களுக்கான மீறல்களை குறிக்கும் முக்கிய எடுத்துக்காட்டுக்கள். இவர்களின் இறப்புகள் குறித்து விசாரணை செய்யப்படாமல் விடக்கூடாது.

இலங்கை பொலிஸ் சேவை உண்மை - பொறுப்பு - நியாயத்துக்கு வழிவகுக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்று கூறியுள்ளார். (ஐ)

## தெல்லிப்பழை...

பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் நிறைவில் ஜனாதிபதி அநுர குமாரவுக்கான மனுவை தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனிடம் தெல்லிப்பழை மருத்துவமனையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வழங்கி வைத்தார். (ஐ)

## நாகபட்டினம்...

என்று இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

தூதரக தகவலின்படி, இந்திய செயல்திறன் இடைவெளி நிதியளிப்பு பொறிமுறையின் கீழ், இலங்கைக்கு ஆண்டுதோறும் 30 கோடி இந்திய ரூபாய்க்கும் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 100 கோடி ரூபாய்) அதிகமான தொகை வழங்கப்பட்டுவருகிறது.

இது, கடந்த ஆண்டைப் போலவே, முக்கிய செயல்பாட்டு செலவுகளை ஈடுகட்டுவதன் மூலம் கப்பல் சேவையின் மலிவு மற்றும் செயல்பாட்டு நிலைத்தன்மையை உறுதி செய்வதை இந்த நிதியளிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதேவேளை, 2024ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மீண்டும் கப்பல் சேவை தொடங்கப்பட்டதிலிருந்து, 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளை, குறித்த கப்பல் ஏற்றிச் சென்றுள்ளது என்றும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ-ஐ)

## இனரீதியான...

இணைந்து வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு 'பிளவு மற்றும் வலுவிழப்பு: இலங்கையில் சிறுபான்மை அரசியலின் சீர்குலைவு' எனும் தலைப்பில் ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலைக்கழகம், சிறுபான்மையின உரிமைகள் நிலையம் என்பன ஆய்வறிக்கையை வெளியிட்டன. அதிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகளின் பிரகாரம் வட, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பின்தள்ளப்பட்டிருப்பதானது, சமத்துவத்தை முன்னிறுத்தி பிரசாரங்களை மேற்கொண்ட போதிலும், அவர்கள் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் முக்கிய கரிசனைக்குரிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்பதையே காண்பிக்கிறது. எனவே, தற்போது சிறுபான்மையினரின் உரிமைகள் நீதியானதும் சமத்துவமானதுமான முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அன்றேல், மீண்டும் இனரீதியான மனக்குறைகள் புத்துருவாக்கம் பெறக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகிறது.

இலங்கையில் கடந்த பல தசாப்த காலமாக துடிப்புடனும் வெற்றிகரமாகவும் இயங்கிய சிறுபான்மை அரசியலானது பல வருட காலமாக கட்டமைப்பு ரீதியாக வலுப்பெற்ற பேரினவாத தேசியவாதம், சிறுபான்மையின கட்சிகள் மத்தியில் செயல்திறன் மிக்க தலைமைத்துவமின்மை, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அல்லது அதிகாரப் பகிர்வு தொடர்பில் தெளிவான முன்மொழிவுகளை முன்வைப்பதில் தேசிய கட்சிகளின் தோல்வி போன்ற காரணங்களால் முழுமையாக சீர்குலைந்துபோயுள்ளது.

இனமோதலின் விளைவாக நாடு முகங்கொடுக்க நேர்ந்த துன்பங்களுக்குத் தீர்வை வழங்குவதில் தேசிய கட்சிகள் அடைந்த தோல்வி சிறுபான்மையின தேர்தல் பிரதிநிதித்துவத்தை தளர்வடையச்செய்வதில் பெரும்பங்காற்றியுள்ளது. இனரீதியான சிறுபான்மையின கட்சிகள் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களின் நலனை முன்னிறுத்தி செயற்படுவதைத் தடுக்கும் வகையில் அவர்களுக்கிடையே பிளவுகளை உண்டாக்குதல் உள்ளிட்ட பல்வேறு உத்திகள் சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகளால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சிறுபான்மையின அரசியல் பிரதிநிதித்துவம் பிளவடைந்திருப்பதும், கட்சிகள் துண்டாடப்பட்டிருப்பதும் சிறுபான்மையின உரிமைகள் மற்றும் நீதி சார்ந்த விடயங்கள் பேசப்படுவதை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

இதேபோன்று வெறுமனே சமத்துவம் தொடர்பான வாக்குறுதிகளை விடுத்து உரிமைகள், நீதி மற்றும் சகலரும் உள்வாங்கப்படல் என்பவற்றை உறுதிப்படுத்தப்படக் கூடியவாறான நம்பத்தகுந்த கடப்பாட்டையே சிறுபான்மையின மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதையே உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முடிவுகள் காண்பிக்கின்றன. இதுகுறித்து சிறுபான்மையின மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய கட்சிகள் அவதானம் செலுத்துவதுடன், அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் பயணம் இன்னும் முடியவில்லை!

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 14

**அண்மைய மாதங்களில் இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை சர்வதேச நாணய நிதியம் ஒப்புக்கொண்டுள்ளது.**

எனினும், இலங்கையின் பயணம் இன்னும் முடிவடையவில்லை என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

சில மிகவும் கடினமான மற்றும் மிகவும் தேவையான சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் துறையின் இயக்குநர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சிகள் உண்மையில் பலனளிக்கத் தொடங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சியில் வலுவான மீட்சி, குறைந்த பணவீக்கம், அதிகரித்து வரும் சர்வதேச இருப்புக்கள், மேம்பட்ட நிதி வருமான வசூல் மற்றும் கிட்டத்தட்ட முடிக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு செயல்முறை ஆகிய பல முக்கிய குறிகாட்டிகளை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த முன்னேற்றங்கள், பொருளாதார நெருக்கடியின் உச்சத்திலிருந்து நாடு அடைந்த மிகப்பெரிய முன்னேற்றம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், பயணம் இன்னும் முடிவடையவில்லை என்று கோசாக் வலியுறுத்தியுள்ளார். கட்டமைப்பு சீர்திருத்தங்களுக்கான தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் முக்கியத்துவத்தை



அவர் கோடிட் டுக் காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள்,தமது நிர்வாகக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டதும், இலங்கைக்கு சுமார் 344 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும். இந்த நிலையில், நிர்வாகக் குழுவின் முடிவுக்கான சரியான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும், அது சரியான நேரத்தில் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் ஜூலி கோசாக் உறுதிப்படுத்தினார். (அ)

## வடக்கில் கன மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 14

வட மாகாணத்திலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரை பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வட மாகாணத்திலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வட மத்திய, மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இதனால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளப் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சிலாபம் முதல் புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும் உள்ள கடற்பிராந்தியங்கள் சில நேரங்களில் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கடற்படை மற்றும் கடற்றொழிலாளர்கள் மறு அறிவிப்பு வரும் வரை இந்தக் கடல் பகுதிகளுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

## நுரைச்சோலையில் நிறுத்தப்படவுள்ள மின் பிறப்பாக்கி!

கொழும்பு, ஜூன் 14

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி நேற்று நள்ளிரவு முதல் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த பழுதுபார்க்கும் பணிகள் 25 நாட்களுக்கு மேற்கொள்ளப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக தேசிய மின் கட்டமைப்பு 300 மெகாவாட் திறனை இழக்கும்.

எனினும், இரண்டு மின் பிறப்பாக்கிகள் செயல்பாட்டில் இருப்பதால், மின்சார விநியோகத்தில் எந்தத் தடங்கலும் ஏற்படாது என்று மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

மூன்றாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் தேசிய மின் கட்டமைப்புடன் மீண்டும் இணைக்கப்பட்ட பின்னர், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் முதல் மின் பிறப்பாக்கி இயந்திரம் பழுதுபார்ப்பதற்காக அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## விமான பாதுகாப்பு தொடர்பில் உறுதியாக உள்ளது இலங்கை!



கொழும்பு, ஜூன் 14

சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பு வகுத்துள்ள வழிகாட்டுதல்களின்படி, எப்போதும் விமான பாதுகாப்பின் மிக உயர்ந்த தரத்தை பராமரிப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

சிவில் விமான போக்குவரத்து ஆணையத்தின் இயக்குநர் சாகர கொட்டகதெனிய இதனை தெரிவித்துள்ளார்.

உலகின் வேறு இடங்களில் விமான விபத்துக்கள் ஏற்பட்டாலும், விமானத் தகுதித் தரங்களை பராமரிப்பது தொடர்ச்சியான நடைமுறையாகும்.

இந்த நிலையில்,

இலங்கை விமான போக்குவரத்துத் துறையில் பாதுகாப்பு தரத்தை தொடர்ந்து பராமரித்து வருவதாக கொட்டகதெனிய கூறியுள்ளார்.

இந்தியாவில் 240 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட விமான விபத்து குறித்து கருத்து தெரிவிப்பது, தற்போது பொருத்தமல்ல என்று கூறிய அவர், அதற்கான காரணம் நிறுவப்பட்டதும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிச்சயம் இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு எச்சரிக்கை!



கொழும்பு, ஜூன் 14

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் மிகவும் விழிப்பு டன் இருக்க வேண்டும் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டாரா தெரிவித்துள்ளார்.


இஸ்ரேல்-ஈரானிய போர் தீவிரமடைந்து வரும் நிலையில், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில், அவதான மாகச் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இஸ்ரேலுக்கு செல்லத் திட்டமிடுபவர்கள் தங்கள் விமான பயணங்களை தாமதப்படுத்துவது நல்லது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் முழுவதும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இஸ்ரேல் மற்றும் ஈரான் உட்பட பிராந்தியம் முழுவதும் விமான பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை அருகில் வைத்திருக்கவேண்டும் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## ரயில் சேவை பாதிப்பால் ஏற்படும் நிதி இழப்பு கணக்காய்வு செய்யக் கோபா குழு பரிந்துரை



கொழும்பு, ஜூன் 14

ரயில் சேவை இரத்துகளால் அரசாங்கத்துக்கு ஏற்படும் தினசரி நிதி இழப்பு குறித்து கணக்காய்வு செய்யவேண்டும் என்று பொதுக் கணக்குகள் குழு பரிந்துரைத்துள்ளது.

இலங்கை ரயில்வே துறையின் தற்போதைய செயற்திறன் குறித்து 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் விவாதிக்க பாராளுமன்றத்தில் ஒன்றுகூடிய கோபா குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் இந்தப் பரிந்துரையை முன்வைத்தார்.

இலங்கை ரயில்வே திணைக்களம் கடந்த மே 08 ஆம் திகதியன்று கோபா குழு முன்னிலையில் அழைக்கப்பட்டது. இதன்போது 2023 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மதிப்பாய்வு செய்யப்பட்டது. அதன்போது வெளிப்படுத்தப்பட்ட பிரச்சினைகளின் அடிப்படையில், இந்த நிறுவனம் தொடர்பான விடயங்களை மேலும் விவாதிக்க குழு முடிவு செய்தது.

அதன்படி, ரயில்வே திணைக்களத்தின் முன்னாள் பொது முகாமையாளர்கள் மற்றும் அமைச்சின் முன்னாள் செயலாளர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

போதுமான எண்ணிக்கையிலான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்படாதது குறித்து குழுவில் கவனம் செலுத்தப்பட்டது, மேலும் 2021 முதல் 2024 வரை போதுமான கூட்டங்கள் இல்லாதது குறித்து முன் னாள் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் முன்னாள் ரயில்வே பொது முகாமையாளர்களிடமிருந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (அ)

## கடற்கரைகளில் ஒதுங்கும் ஆபத்துமிக்க பொருட்கள்!

### சுற்றுச்சூழல் அமைச்சு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 14

சமீபத்தில் இந்தியாவின், கேரளக் கடற்கரையில் விபத்துக்குள்ளான எம்.எஸ்.சி எல்சா 3 கப்பலில் 13 ஆபத்தான கொள்கலன்கள் இருந்ததாக சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர். எச். எம். பி. அபேகோன் கூறுகையில்,அந்த கப்பலில் உள்ள சில பொருட்கள் தற்போது இலங்கை கடற்கரைகளில் கரையொதுங்கியுள்ளதாக தெரிவித்தார்.

நிலவும் மோசமான வானிலை காரணமாக அந்த கப்பலில் உள்ள பொருட்கள் இலங்கை கடற்கரைக்கு மேலும் கரையொதுங்கக்கூடிய அபாயம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் ஜகத் குணசேகர, கரையொதுங்கும் பொருட்களை அகற்றும் பணிகள் தொடங்கப்படும் என்று தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.